# வேளாண்மைத்துறை

## மானியக் கோரிக்கை எண்.5

## அறிவிப்புகள் 2013–2014

திரு. செ. தாமோதரன்

வேளாண்மைத்துறை அமைச்சர்

## 1. ‘‘புவி விபர’’ அடிப்படையிலான மண்வரைபடங்கள்

வேளாண்மையில் இரண்டாம் பசுமைப்புரட்சியை ஏற்படுத்தி, ‘‘இருமடங்கு உற்பத்தி மும்மடங்கு வருமானம்’’ என்ற தாரக மந்திரத்தை தன்னுள் கொண்ட **மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** இரசாயன உரங்களை தேவைக்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இடுவதால், மண்வளம் கெடுவதோடு, மகசூல் இழப்பும் ஏற்படுவதைத் தடுக்க ரூ.**6** கோடி நிதி மதிப்பீட்டில், மாநிலத்திலுள்ள அனைத்து பகுதிகளிலும் மண்பரிசோதனை மேற்கொண்டு, **‘‘புவி விபர’’ அடிப்படையில் மண்வரைபடங்களை** கணினி மூலம் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதனால், மண்வளம் பாதுகாக்கப்பட்டு சாகுபடி செலவினம் குறைக்கப்படும்.

## 2. கரும்பு சோகை நிலப்போர்வை மூலம் மண் ஈரம் பாதுகாத்தல்

கரும்பு அறுவடைக்குப்பின், விவசாயிகள் கரும்புச்சோகையினை எரிப்பதால், மண்வளம் கெடுவதோடு, சுற்றுச்சூழலும் பாதிப்படைகிறது. இதனைத் தடுத்து, மண் ஈரம் காத்து சுற்றுச்சூழலையும் பேண, **கரும்புச் சோகையினை தூளாக்கி நிலப்போர்வை அமைக்க, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** ஏக்கருக்கு ரூ.800/– வீதம் 12500 ஏக்கர் பரப்புக்கு பின்னேற்பு மானியமாக ரூ.1 கோடி வழங்கப்படும்.

## 3. சிறுதானியம் மற்றும் பயறு வகைப் பயிர்களின் சாகுபடியினை அதிகரிப்பதன் மூலம் ஊட்டச்சத்துப் பாதுகாப்பு

தமிழகத்தின் ஊட்டச்சத்துப் பாதுகாப்புக்கு உறுதி செய்ய புரதச்சத்துக்கள் மிகுந்த பயறு வகைப்பயிர்கள் மற்றும் உடல்நலம் காக்கும் சிறுதானியப் பயிர்களின் சாகுபடியினை ஊக்குவிக்கும் பொருட்டு, விளை பொருட்களைச் சுத்திகரிப்பு செய்யக் கூடிய இயந்திரங்களை **மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி** ரூ.5.25 கோடி மதிப்பீட்டில், விவசாயக்குழுக்களுக்கு வழங்கி அதன் மூலம் சிறுதானியங்கள் மற்றும் பயறு வகைகளை மதிப்புக்கூட்டி, கூட்டுறவுத்துறை மூலம் நல்ல விலைக்கு கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

## 4. திருவண்ணாமலையில் ‘‘சிறுதானிய மகத்துவ மையம்’’

சிறுதானியங்களில் உயர் ஆராய்ச்சி செய்ய ஏதுவாக **மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** திருவண்ணாமலை மாவட்டம் அத்தியேந்தல் அரசு விதைப்பண்ணையில் ரூ.1 கோடி நிதி மதிப்பீட்டில், **‘‘சிறுதானிய மகத்துவ மையம்’’** ஒன்று நிறுவப்படும்.

## 5. தரமான தோட்டக்கலை நடவுகன்றுகள் மற்றும் விதைகள் உற்பத்தி

தோட்டக்கலைப் பயிர்களில் தரமான விளைபொருட்களை உற்பத்தி செய்து விவசாயிகள் நிலையான வருமானம் பெற, தரமான விதைகளும் நடவுக்கன்றுகளும் அவசியம் என்பதால், **மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி** ரூ.15 கோடி நிதி மதிப்பீட்டில், தோட்டக்கலைப் பண்ணைகளிலேயே **சான்றுபெற்ற தரமான தோட்டக்கலை நடவுக்கன்றுகள் மற்றும் விதைகளை** உற்பத்தி செய்யப்படும்.

## 6. “**நீங்களே செய்து பாருங்கள்**(Do-it-yourself kit) - **காய்கறிச் சிறுதளை**

சென்னை மற்றும் கோவை மாநகரங்களில் புத்தம்புதிய, நச்சுத்தன்மையற்ற, சத்தான காய்கறிகளை அவரவர் வீட்டு மாடியிலேயே உற்பத்தி செய்வதை ஊக்குவிக்க **மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி** தொழில்நுட்ப உதவியுடன் **“நீங்களே செய்து பாருங்கள் – சிறுதளைகள்”** (Do-it-yourself-kit) விருப்பமானவர்களுக்கு வழங்கப்படும்.

## 7. உணவு பதப்படுத்தும் தொழில் முனைப்பு மையங்கள்

தோட்டக்கலைப் பயிர்களில் விளைபொருட்கள் வீணாவதைக் குறைக்கும் நோக்குடன், விரைவில் அழுகும் தோட்டக்கலை விளைபொருட்களை நீண்ட நாள் கெடாமல் பாதுகாக்கவும், விவசாயிகளுக்கு மதிப்புக்கூட்டி நல்லவிலை கிடைக்கச் செய்யவும், ரூ.2.20 கோடி மதிப்பீட்டில் **மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி ஸ்ரீரங்கம் மற்றும் பொள்ளாச்சியில் “உணவு பதப்படுத்தும் தொழில் முனைப்பு மையங்கள்”** (Food Processing Incubation Centres) அமைப்பதுடன், விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோர்களை உணவு பதப்படுத்துதலில் வல்லுநர்களாக்க உரிய செயல்முறை பயிற்சியும் அளிக்கப்படும்.

## 8. வெங்காயப்பயிர்களுக்கான விஞ்ஞான சேமிப்பு அமைப்புகள்

வெங்காயப் பயிரில் விளைச்சல் அதிகரிக்கும் போது, உரிய விலையின்றி விவசாயிகளுக்கு பெருத்த நட்டம் ஏற்படுகிறது. எனவே, விஞ்ஞான முறைப்படி தரம் குறையாமலும், இழப்பின்றி சேமிப்பதை உறுதி செய்யவும், ரூ.6 கோடி மதிப்பீட்டில், **மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி** 2 முதல் 12 மெ.டன் வரை கொள்ளளவுள்ள **"விஞ்ஞான சேமிப்பு அமைப்புகளை"** வெங்காயம் அதிகமாக விளையும் 12 மாவட்டங்களில் அமைக்கப்படும்.

## 9. ஊரக சந்தைகள் மேம்பாடு

சிறு, குறு விவசாயிகள் தங்கள் விளைபொருட்களைக் கொண்டு செல்லும் **ஊரகச்சந்தைகளுக்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி** அணுகுசாலைகள், கடைகள், மின்னணு எடைத்தராசு, மின்னணு விலை விபரப் பலகை உள்ளிட்ட **வணிக உட்கட்டமைப்பு வசதிகள்** ரூ.10.20 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும். இதன்மூலம் விவசாயிகள் தரம் பிரித்தல், சுத்திகரித்தல் மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்த விபரங்களைப் பெறுவதால் அருகிலுள்ள பிற சந்தைகளின் நிலவரம் அறிந்து விளைபொருட்களுக்கு கூடுதல் விலை பெற இயலும்.

## 10. வேளாண் விரிவாக்கத்தில் விரைவான செயல்பாடு

வேளாண் விரிவாக்கப்பணியாளர்கள் கிராமங்களில் உள்ள விவசாயிகளின் வீடுகளுக்கு குறிப்பிட்ட தேதிகளில் சென்று சேவை புரியும் வகையில் **மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி** வேளாண் விரிவாக்கப் பணியாளர்களுக்கு நிரந்தரப்பயண முறை அமல்படுத்தப்படும். மேலும் நடப்பாண்டில் ரூ.**10.50** கோடி மதிப்பீட்டில், விரிவாக்க அலுவலர்களுக்கு **தொடுதிரை சிறுகணினி**, ‘‘**அனைத்துத் தொழில்நுட்பங்களையும் அறிக**’’ எனும் கணினி மென்பொருள் ஆகிய பல்வேறு நவீன விரிவாக்க வசதிகளும் ஏற்படுத்தித் தரப்படும்.

## 11. வானிலை, சாகுபடி மற்றும் வேளாண் விற்பனை குறித்த தகவல்களை குறுஞ்செய்தி மற்றும் குரல்வழிச் செய்தி வாயிலாக வழங்குதல்

பருவநிலை தொடர்பான தகவல்களின் அடிப்படையில் விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய வேளாண் சாகுபடி குறித்த ஆலோசனைகளை **மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி** குறுஞ்செய்தி மற்றும் குரல்வழிச் செய்தி வசதிகள் மூலம் விவசாயிகளுக்கு நேரடியாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், பகுதிகளுக்கேற்றவாறு விவசாயிகள் பின்பற்ற வேண்டிய சாகுபடித் திட்டங்களையும், வேளாண்மை விற்பனை பற்றிய தகவல்களையும் விவசாயிகளுக்கு வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 12. விவசாயிகளின் பண்ணைகளில் நீடித்த, நிலையான வருமானம்

விவசாயிகளுக்கு நீடித்த, நிலையான வருமானம் கிடைக்க பல்வேறு துறைகளின் திட்டங்கள், நடவடிக்கைகள் மற்றும் நிதி நிறுவன திட்டங்களை ஒருங்கிணைத்து மாவட்டம் முழுவதும் விவசாயிகளின் பண்ணைகளிலேயே மூன்றாண்டுகள் செயல்படுத்தி, ஒருங்கிணைந்த பண்ணையத்திட்டத்தில் மாதிரி மாவட்டமாக உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி** விழுப்புரம் மாவட்டத்தில் இத்திட்டம் முன்னோடி திட்டமாக ரூ.15 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

**13. வேளாண்மைத்துறையில் காலிப்பணியிடங்களை நிரப்புதல்**

வேளாண் விரிவாக்க சேவையினை வலுப்படுத்தி, உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு தேவையான இடுபொருட்களைக் கொண்டு சேர்ப்பதை உறுதி செய்ய, **மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி** வேளாண்துறையில் **241** வேளாண்மை அலுவலர்கள், **319** உதவி வேளாண்மை அலுவலர்கள், **239** கிடங்கு மேலாளர் மற்றும் **856** கிடங்கு காவலர்கள் பணியிடங்கள் நிரப்பப்படும்.

## 14. புதிய வாகனங்கள்

வேளாண்பணியாளர்கள் விரைந்து வேளாண் பெருமக்களுக்கு சேவை புரியும் நோக்குடன், பழுது நீக்கம் செய்ய இயலாத பழைய வாகனங்களுக்குப் பதிலாக **மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி** வேளாண்துறைக்காக 166 வாகனங்களும், தோட்டக்கலைத் துறைக்காக 21 வாகனங்களும், வேளாண் விற்பனைத் துறைக்காக 13 வாகனங்களும், விதைச்சான்றுத்துறை மற்றும் அங்ககச் சான்றுத்துறைக்காக 16 வாகனங்களும் ஆக மொத்தம் 216 புதிய வாகனங்கள் வாங்கப்படும்.